[1993 ஏப்ரல் 1

இதனை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு சிறப்பான காரியங்களை ஆற்றுவதற்காக நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். இந்திய திருநாட்டைப் பொறுத்த மட்டிலே இன்றைக்கு தமிழகம் 3ஆவது மாநிலமாக இருக்கலாம். ஆனால், நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக இறால் பிடிப்பதைப் பொறுத்த மட்டில் முதலாவது மாநிலமாக, தன்னிறைவு பெற்ற மாநிலமாக நிச்சயமாக உருவாகும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 220, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

220—

தொட்டியம் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை

*9799— திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதியில் தீப்பெட்டி, தீக்குச்சி தயாரிக்கும் தொழிலில் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளதால் தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொட்டியம் தொகுதியில் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியில் நிறைய தீப்பெட்டி தொழிற்சாலைகளை தனியார் நிறுவனத்தினர் நடத்தி வருகின்றனர். அதனால், அதிக தனியார் நிறுவனத்தினர் இலாபத்தை அமைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ..(மணியடிக்கப் பெற்றது.)

1993 ஏப்ரல் 1]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். ஆர். சிவபதி : தீப்பெட்டித் தொழிற்சாலை நடத்துவதற்குத் தேவையான எல்லா மூலப் பொருட்களும் கிடைப்பதாலும், தேவையான தொழிலாளர்கள் கிடைப்பதாலும், அரசுத் தரப்பில் மறுபரிசீலனை செய்து ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியார் மட்டுமே தீப்பெட்டித் தொழிலை நடத்தி வருவதாகச் சொன்னார்கள். தொழில் மற்றும் வணிகத் துறையினரின் கீழ் 15 தீப்பெட்டி கூட்டுறவுச் சேவை சங்கங்களும், 26 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் அந்தப் பகுதியில் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

204—

மரங்களை வெட்டுபவர் மீது நடவடிக்கை எடுக்க சமூக நலக் காடுகள் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கல்.

*9357—திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வனத்துறை அலுவலர்கள், மரங்களை வெட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்படுவதுபோல், சமூக நலக் காடுகள் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க சட்டம் இயற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.